Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 28 | 12 - 07 - 1992 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 145

## தேடாத சடலங்கள் எவ்வாறு கிடைத்தன?

வை-8 விமான விபத்து நடைபெற்ற இடத்திற்குத் தரைப்படையினர் செல்ல வில்லை. அவ்விபத்தில் சம்பந்தப்பட்டவர்களின் உடல்கள் துண்டு துண்டாகச் சிதறியிருக்கலாம். தேவையில்லாத இம் முயற்சியில் ஆட்களை இழக்க நேரும் என்பதால்தான் செல்லவில்லை. வாராந்த அமைச்சரவை தகவல் கரும் மாநாட்டில் கேர்ணல் முனசிங்கா இத் தகவலை வெளியிட்டார் இதேவேளை, பாது காப்புப் படையினர் நடத்திய தேடுதலின் போது வை-8 விழுந்த இடத்தில் பத்துச் சடலங்களைக் கண்டெடுத்தனர் என்று கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்தை மேற்கோள் காட்டி சிறிலங்கா சர்வதேச வானொலி நேற்று அறிவித்தது. இந்தச் சடலங்கள் கொழும்புக்குக் கொண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

### செட்டிக்குளத்தில் புலிகள் வீரசாதனை

# சிறிலங்கா இராணுவ முகாம் நிர்மூலம்

# 47 இராணுவம் பலி: பலர் படுகாயம்

(நமது நிருபர்)

செட்டி குளம் பகுதியிலுள்ள வண்ணான் குளம் என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர். விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான இத் தாக்குதலில் 47ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர். முகாம் முற்றாக நிர்மூலமாக்கப் பட்டது.

விடுதலைப் புலிகளின் இந்த துணிகரமான தாக்குதலை நேற்று அதிகாலை 3.10 மணியளவில் மேற்கொண்டனர். 75 இற்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்டிருந்த இந்தமுகாமைசுற்றி வளைத்து புலிகள் தமது தாக்குதலைத் தொடுத்தனர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்த புலிகளின் உக்கிரத் தாக்குதலின் பின்னர் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது. முகாமில் இருந்த சகாக்களின் உடலங்களையும் விட்டு விட்டு ஏனைய இராணுவத்தினர் வெளியேறினர்.

முகாமை விட்டு வெளியேறிய இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முகாமிற்கு வெளியில் சுமார் 90 நிமிடங்கள் வரையிலும் மோதல்கள் இடம் பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முகாம் வீழ்ச்சி அடைந்ததும், முகாமிற்குள் பிரவேசித்த விடுதலைப் புலிகள் அங்கிருந்து பெருந் தொகையான ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினர். பின்னர் முகாம் முற்றாக அழிக்கப்பட்டது.

இம்முகாம் தாக்குதலை நேரில் பார்த்ததாக கூறும் உள்ளூர் வாசிகள் முகாமிற்கு முற்றாக தீவைக்கப்பட்டதாக தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

## 4 கவச வாகனங்கள் புலிகளால் அழிப்பு

(வவுனியா)

செட்டிக்குளம் பகுதியிலுள்ள வண்ணான்குளம் என்னும் இடத்தில் நேற்று விடுதலைப் புலிகள் சிறிலங்கா இரணுவ முகாம் மீது மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலின் போது அங்கிருந்த இரண்டு கவச வாகனங்களும் ஒரு புல்டோசரும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இராணுவ முகாம் மீதான தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராணுவத்தினருக்கு உதவியாக தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் வெளியேறி வந்தனர் இவர்களின் கவச வாகனமொன்று விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட வாகனக் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியது. மற்றுமோர் கவசவாகனம் புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலால் முற்றாகச் சேதமடைந்தது.

## உதவிக்கு வந்த ராணுவம் புலிகளால் விரட்டியடிப்பு

(வவுனியா)

வண்ணான்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த வேளையில், இராணுவத்திற்கு உதவி வழங்க என இம் முகாமிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து பெருமளவுஇராணுவத்தினர் வெளி வந்தனர்.

இவர்களை வழிமறித்து விடுதலைப்புலிகள் அணியொன்று கடும் தாக்குதலை மேற்கொண்டது. விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல்களால் இராணுவம் அவ்விடத்தை விட்டு நகர முடியாது திண்டாடியது

புலிகள் அவ்விடத்தில் வைத்திருந்த மிதிவெடிகள் வெடித்ததனால்சிலஇராணுவத்தினர் கால்களை இழந்தனர். இரண்டு கவசவாகனங்களும் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

நாற்பத்தைந்து நிமிட நேரம் இடம் பெற்ற இம் மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## 6 வேங்கைகள் வீரச்சாவு

(வவுனியா)

செட்டிக்குளம பகுதியில் வண்ணான்குளம் என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்று நேற்று விடுதலைப்புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. 46 இராணுவத்தினர்

இல. 02, தொப்பிக்கடையடி இராமநாதபுரம் கல்மடு கிளிநொச்சி ஆகியோரே இவ்வெற்றிகரத் தாக்குதலில் வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## திருக்கோணமலை நகரில்

இராணுவ முகாம் மீது மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலின் போது அங்கிருந்த இரண்டு கவச வாகனங்களும் ஒரு புல்டோசரும் விடு

வத்தினருக்கு உதவியாக தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர்

மற்றுமோர் கவசவாகனம் புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலால் முற்றாகச் சேதமடைந்தது.

நேரில் பார்த்ததாக கூறும் உள்ளூர் வாசிகள் முகாமிற்கு முற்றாக தீவைக்கபபட்டதாக தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

செட்டிகுளம் பகுதியிலுள்ள வண்ணான் குளம் என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவமுகாம் நேற்று விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

அங்கிருந்த பெருமளவு ஆயுதங்களும், வெடிப் பொருள்களும், இராணுவ உபகரணங்களும் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | 60 மி மீ பைபோட் மோட்டார் | — 01 |
| ★ | ரி 56 - 2ரக துப்பாக்கி | — 34 |
| ★ | ரி 56 -1 ரக துப்பாக்கி | — 47 |
| ★ | ரி 81 - 1 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | ரி 56 புதிய மொடல் துப்பாக்கி | — 02 |
| ★ | எஸ். எல். ஆர். | — 08 |
| ★ | 303 துப்பாக்கி | — 14 |
| ★ | 60 மி மீ ஷெல் | — 19 |
| ★ | 60 மி மீ பராலைட் | — 03 |
| ★ | 60 மி மீ ஸ்கோப் | — 01 |
| ★ | 60 மி மீ தோட்டா | — 24 |
| ★ | 60 மி மீ ஷெபியூஸ் | — 13 |
| ★ | நடுத்தர றவைகள் | — 14,940 |
| ★ | ஏ. கே. மகசீன் | — 300 |
| ★ | ஏ. கே. காஸ்ரவைகள் | — 25 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி. மகசின் | — 03 |
| ★ | ஏ. கே. கோல்சர் | — 26 |
| ★ | நேட்டோ ரவைகள் | — 1,728 |
| ★ | எஸ். எல். ஆர். பைனட் | — 17 |
| ★ | எஸ். எல். ஆர். மகசின் | — 16 |
| ★ | 303 மகசின் | — 14 |
| ★ | 303 ரவைகள் | — 536 |
| ★ | 303 பைனைட் | — 24 |
| ★ | இரு விழி தொலைகாட்டி | — 01 |
| ★ | தொலைத் தொடர்பு சாதனம் | — 02 |
| ★ | ஜே. ஆர். கைக் குண்டு | — 20 |
| ★ | ரி. என். ரி. கைக் குண்டு | — 20 |
| ★ | பொறின் குண்டு (சிறிது) | — 85 |
| ★ | எரி குண்டு | — 06 |
| ★ | கிளைமோர் (சிறிது) | — 18 |
| ★ | கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவி | — 05 |
| ★ | டிற்றனேற்றர் | — 162 |
| ★ | வயர் றோல் | — 15 |
| ★ | பற்றறிப் பெட்டி | — 15 |
| ★ | பம்பிங் கண்ணி வெடி | — 09 |
| ★ | தலைக்கவசம் | — 02 |
| ★ | தண்ணீர் கான் | — 12 |
| ★ | தொப்பி | — 15 |
| ★ | மில்றி பெல்ட் | — 13 |
| ★ | கிற்பாக் | — 06 |
| ★ | சப்பாத்து | — 20சோடி |
| ★ | மழைக்கவச அங்கி | — 09 |

# ராணுவவட்டாரங்கள் அதிர்ச்சி

(கொழும்பு)

வண்ணான்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலினால், இராணுவ வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

வை-8 ஐபுலிகள்சுட்டு வீழ்த்தியதினால், குழப்பத்திற்குள்ளாகிப் போயிருந்த இராணுவ வட்டாரங்கள், இயக்கச்சியில் இராணுவம் தனதுமுழுப்பலத்தையும் திரட்டித் தாக்கிய போதிலும், இருபதிற்கு மேற்பட்ட இராணுவம் கொல்லப்பட்டமையும் 35 க்கு மேற்பட்டோர் காயமடைந்ததும், அதேவேளை, திருமலையில் புலிகளின் அதிரடித் தாக்குதலில் 18 இராணுவம் கொல்லப்பட்டதும், அதையடுத்து அடுத்தநாள் (நேற்று) 47க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ் ஆண்டிலேயே ஒரே தாக்குதலில் அதிக எண்ணிக்கையில் இராணுவத்தினர் கொல்லப்பட்ட தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை, புலிகளின் தற்போதைய போர் யுக்திசிறிலங்கா இராணுவத்திற்குப் பிரச்சினையாகிவிட்டது என பி. பி. ஸி. தெரிவித்தது.

## பரீட்சை திட்டமிட்டபடி நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் திட்டமிட்டபடி நடைபெற்றது.

இப்பரீட்சை சுமார் 48 பரீட்சை நிலையங்களில் சுமூகமான முறையில் நடைபெற்றுள்ளது என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. (பா)

லங்கா இராணுவ முகாம் ஒன்று நேற்று விடுதலைப்புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது. 46 இராணுவத்தினர் பலியாகியதுடன் பெருந்தொகையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன. இரண்டு கவச வாகனங்கள் புல்டோசர் என்பன புலிகளால் அழிக்கப்பட்டன.

இத்தீரமிகு வெற்றிகரத் தாக்குதலில் ஆறு வேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்.

★ கப்டன் மணிமாறன்
(செல்வன் - நடராசா சிவாகரன்) தண்ணீரூற்று முள்ளியவளை முல்லைத்தீவு,

★ கப்டன் தெய்வம்
(நடராஜா ராஜி) இராமனூர் புளியங்குளம் வவுனியா,

2ஆம் லெப்டினன்ட் ஜெயரூபன்
(நாயகன் - சின்னத்தம்பி வசந்தகுமார்) இல. 795 கட்சன் றோட் வட்டக்கச்சி கிளிநொச்சி,

★ 2ஆம் லெப்டினன்ட் சுரேந்திரன்
(பாபு - கிருஷ்ணமூர்த்தி கலாகரன்) புளியங்கூடல் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம்,

★ 2ஆம் லெப்டினன்ட் இளங்கோ
(இராமசாமி ரஞ்சித்நிரஞ்சன்) ராஜன்) மன்னார்,

★ வீரவேங்கை பகீரதன்
(ஆறுமுகம் நடராஜா) ... சாவு அடைந்தவர்களாவர்.

... கொள்கின்றனர்.

## திருக்கோணமலை நகரில் பொலிஸ் கெடுபிடி அதிகரிப்பு

(திருக்கோணமலை)

திருகோணமலை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த சில தினங்களாக பொலிசார் வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிது.

வில்லூன்றி பெரிய கடைப் பகுதி, உவர்மலை போன்ற இடங்களை உள்ளடக்கிய பகுதிகளிலேயே இச்சோதனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை சூடு

கச்சதீவுக்கு அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டு மீனவர் படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் சுட்டதில் ஆறு மீனவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு மீனவர் காணாமற் போயுள்ளதாகவும் அவர்களை இந்தியக் கடற்படை தேடி வருவதாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கோவை மகேசனின் நினைவஞ்சலிக் கூட்டம்

(நமது நிருபர்)

கோவைமகேசன் அவர்களின் நினைவு அஞ்சலி நிகழ்ச்சி நேற்று மாலை 6.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகியது.

விழாவிற்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக துணைத்தலைவர் திரு.தேவர் தலைமை வகித்தார். இந் நிகழ்ச்சியில் கோவை மகேசன் அவர்களின் சகோதரர் அன்னாரின் படத்திற்கு மாலை அணிவித்து, குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை அரம்பித்தார்

திரு. தேவர் அவர்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழு நடவடிக்கைச்கு அரசின் பங்கு போதவில்லை

- அதாவுட செனவிரத்னா

(கொழும்பு)

“வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வொன்றினைக் கண்டறியும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைக்கு அரசின் பங்களிப்பு போதுமானதாக இல்லை” என கேகாலை மாவட்ட எம்.பி அதாவுட செனவிரத்னா பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அறவீடு சட்டமூலம் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஜனாதிபதி பதவிக்கு வந்து மூன்றரை வருடங்கள் ஆகியும், வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு ஒன்று இதுவரை காணப்படவில்லை.

மேலும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாததினால் யுத்தம் நீடித்துக் கொண்டே செல்கிறது. இதனால் நாளுக்கு நாள் மக்கள் மீது சுமை கூடி வருகிறது. கடந்த மூன்றரை வருடகாலப்பகுதிக்குள் வாழ்க்கைச் செலவுப் புள்ளியும் அதிகரித்துள்ளது. யுத்தத்தின் காரணமாக அரசாங்கத்தின் வரி அறவிடும் நடைமுறைகளினாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## சேவை நலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ற்றன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. ச.சேனாதிராசா அவர்களுக்கு காரைநகர் கொத்தணி பாடசாலை அதிபர்கள் சேர்ந்து பிரியாவிடை நிகழ்ச்சி யொன்றை நிகழ்த்தினார்கள்.

இந் நிகழ்ச்சி காரைநகர் கொத்தணி அதிபர் செ. தேவதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## நவம்பர் 6 இல் வரவு செலவுத் திட்டம்

எதிர்வரும் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் மாதம் ஆறாம்திகதி சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் மீதான விவாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றுக் கொள்ளவும்

### காசோலை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் வீதியில் காசோலை ஒன்று இ. ராஜ்மோகன் எனபவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களை காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## மூன்றாவது ஆண்டுவிழா

(குருநகர்)

சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் மூன்றாவது ஆண்டு விழா யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

திருமதி அருள்நங்கை தலைமையில் பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள் ஆய்வுரை வழங்குவார்.

பொதுநலப் பண்பே சைவ சித்தாந்தத்தின் உயிர் மூச்சு, சைவ சித்தாந்தமும் அண்மைக் கால ஆய்வுகளும், இந்து தத்துவத்தில் சைவ சித்தாந்தம் ஆகிய தலைப்புகளில் கருத்துரைகள் நடைபெறும். (21)

## ஊர்காவல் படைபற்றி மீளாய்வு

(கொழும்பு)

ஊர்காவற்படை, மற்றும் துணை இராணுவப் படை அமைப்புகளுக்கு ஆயுதமும்பயிற்சியும்வழங்கும் திட்டம்பற்றி மறுபரிசிலனை செய்வதற்காக நீதியரசர் ஜயலத் தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக தெரியவரு

## செய்தியாளர்கள் தேவை

'ஈழநாதம்' பத்திரிகைக்கு செய்தி சேகரிக்கும் பணியில் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சுன்னாகம், மல்லாகம், சாவகச்சேரி, நெல்லியடி, புத்தூர், உரும்பராய், மானிப்பாய், கிளிநொச்சி மற்றும் புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளுக்கே செய்தியாளர்கள் கோரப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் வரும் ஞாயிற்றுக்கிழமை (19- 07- 92) காலை 11.00 மணிக்கு எமது பணிமனையில் நேரில் சந்திக்கவும்.

பிரதம ஆசிரியர்

யாழ் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு 7-ம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

**முதலாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| கலைப்பிரிவு | 13-07-92 | 9.00-12.00மு.ப |
| வர்த்தகப்பிரிவு | 16-07-92 | 9.00-12.00மு.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 20-07-92 | 9.00-12.00மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | |
| விவசாயபீடம் | | |

**இரண்டாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 13-07-92 | 1.30-3.00பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 16-07-92 | 1.30-3.00பி.ப |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 20-07-92 | 1.30-3.00பி.ப |
| விவசாய பீடம் | | |

**மூன்றாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் | 15-07-92 | 9.00-12.00மு.ப |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 17-07-92 | 9.00-12.00மு.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 21-07-92 | 9.00-12.00மு.ப |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | |

**நான்காம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம்(4ம்,5ம்வ.) | 15-07-92 | 1.30-3.00பி.ப |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 17-07-92 | 1.30-3.00பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 21-07-92 | 1.30-3-00பி.ப |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | |


கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2 - பெறுமதியான முத்திரை

பதிவாளர்

(சி 4681)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் – வரையுள்ளது

சகல அங்கத்தவர் கவனத்துக்கு

## வாக்காளர் பட்டியல்

எமது சங்கக் கிளைக்குழுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வாக்காளர் பட்டியல்கள் ஒவ்வொரு கிளைகளிலும் தொங்க விடப்பட்டுள்ளது. இப்பட்டியல்களில் ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் 19-07-92க்கு முன்பாக எமக்கு அறியத் தரும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்,

292, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
11-07-1992

செயலாளர்

(சி/4683)

யாழ்ப்பாண மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட கடைகளுக்கு யாழ், மாநகரசபை ஆணையாளரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்,படுகின்றன. கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 100/-ம் கேள்விப் பிணைப்பணம் ரூபா 2500 -உம் செலுத்தி கேள்விப் படிவங்களை நல்லூர் பிரதான அலுவலக நானாவித இறைவரிப் பகுதிக் கிளையில் 23 - 07 - 92 வியாழக்கிழமை பி, ப.3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் 24-07-92 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் " " இலக்க கடைக்கான கேள்வி எனக் குறிப்பிட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும், கேள்விகள் அன்றையதினம் பி. ட. 2.30 மணிக்கு திறந்து ஆராயப்படும் அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பிரசன்னமாக இருக்கலாம். மேலதிக விபரங்களை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

| கடைகளின் விபரம் | மாத வாடகை | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித்தொகை |
|---|---|---|
| (அ) பெரிய கடைப் பகுதிசத்திரச் சந்தைக்கடைகள் இல..1-60 கடைகள் | 168.75 | 7,500/- |
| (ஆ) நல்லூர் கடைஇல. 4 | 119.00 | 10, 000/- |

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம். 10.07.1992.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி 4677)

## பொது அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபை

### வீதியோர வியாபாரங்களை தடைசெய்தல்

நகர அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகளுக்கு வசதியாக சகல வீதியோர வியாபாரிகளையும் (கஸ்தூரியார் வீதி குளக்கரையோர நடைபாதை வியாபாரிகள் உட்பட). அவ்விடத்தில் நின்றும் 31.07.92க்கு முன்நீங்குமாறு கோருவதோடு எதிர்காலத்தில் எவ்விதவீதியோர வியாபாரங்களும் யாழ். மாநகரசபை எல்லைக்

## நினைவு கூருகின்றோம்... 1992 - 07 - 12

1986-ம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக்கடற்பரப்பில் (மன்னார்-விடத்தல் தீவு) பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **ஜெயா** (இராமச்சந்திரன் ஜெயசுந்தரம் - பெரிய புல்லுமலை, மட்டக்களப்பு.)

அம்பாறை - எருவில் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நகுலன்** (இளையதம்பி அருளானந்தம் - இன்ஸ்பெக்டர் ஏத்தம், பொத்துவில் - 3, அம்பாறை)

**சந்திரன்** (இ.சந்திரன்-அக்கரைப்பற்று அம்பாறை)

வல்வெட்டித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**சுந்தர்** (நாகராசா தியாகசீலன் - செல்வபுரம், முல்லைத்தீவு)

வல்லைவெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப்.சலீம்** (சண்முகசுந்தரம் அரவிந்தன் - கரணவாய் தெற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்)

இதேபகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஏறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஞானி** (நல்லதம்பி சிவஞானம் - மத்தொணி, கரவெட்டி, யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப்.டெனிஸ்** (பரமரட்சகபாலன் அனுரா- பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்)

வளலாயில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சா வெய்திய -

**கரிகரன் / குட்டிக்கண்ணா** (ஹரிச்சந்திரன் - தாவடி வீதி, சுதுமலை)

திருநெல்வேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப்பிரிந்த-

**சரளன்** (சிவசுப்பிரமணியம் தனஞ்செயன்- கோண்டாவில் மேற்கு)

சக்கோட்டை, புனித சேவியர் தேவாலயத்தின் மீது பருத்தித்துறை முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, பெண்குழந்தை ஆகிய மூன்று தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **றோய்** (சிறிதரன் மரியதாஸ் - மன்னார்)

முல்லைத்தீவு / மாங்குளம்-வவுனிக்குளம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நீர்ப்பாசனத்திணைக்கள அலுவலகரான சில்லாலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆனையிறவில், இந்தியப் படையினர் மற்றும் தேச விரோத சக்திகளினால் படுகொலைசெய்யப்பட்ட இயக்கச்சி, சங்கத்தார் வயலைச்சேர்ந்த தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை நிலாவெளி,

கின்றது. அழிச்ச பொத்தான படுகொலைகளையடுத்து கடந்த வாரம் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டதாக சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

## சந்தனமரம் வீடியோ திரைப்படம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின்கலை, பண்பாட்டுக் கழகத்தின் கிளிநொச்சிப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டுவரும் வீடியோ திரைப்படத்தின் படப்பிடிப்பு முடியும் தறுவாயில் உள்ளது.

சந்தனமரம் என்ற இப்படம் வெகுவிரைவில் காண்பிக்கப் படவுள்ளது.

இப்படத்திற்காக தமிழீழத்தின் பல பகுதிகளில் படப்பிடிப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இரண்டரை மணி நேரப் படமான இதற்கான காட்சிகள் சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி நகரப் பகுதியில் படமெடுக்கப்பட்டது.

இந்திய இராணுவம், மற்றும் தேசத்துரோகிகளின் நடவடிக்கை போன்றவை கிளிநொச்சியில் படமாக்கப்பட்ட போது, ஏராளமான பொது மக்கள் ஆர்வத்துடன் படப்பிடிப்பை பார்த்து ரசித்தனர்.


(தி)

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயப் பெருவிழா இம் மாதம் 3 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இங்கு தினமும் வழிபாடும் அருளுரையும் நடைபெற்று வருகின்றது.

நேற்று மாலை நற்கருணை விழாவும் பவனியும் இடம் பெற்றது. இன்று காலை 6.30 மணிக்கு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் தொடர்ந்து புனித பவனியும் இடம்பெற இருக்கின்றது.



## திரு. செ. திருநாவுக்கரசு

(சமாதான நீதிவான், முன்னைநாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னைய உடுப்பிட்டி கிராம சபைத்தலைவர்)

அன்னை மடியில் 15.07.1920 — ஆண்டவனடியில் 12.07.1987

திதி: 16.06.1992

பாசத்தின் சிகரமாய் புண்பின் உறைவிடமாய்
நேசத்தைக் காட்டி எமை வளர்த்த ஐயா!
கண்ணை இமைகாப்பது போன்று
காலமெல்லாம் எமைக் காத்தீர்!
விண்ணைக் காப்பதற்கோ — எம்மைவிட்டு
விரைவாக சென்று விட்டீர்!
அன்னியப்படைகளின் அட்டகாசத்தால்... அன்று
உமது உயிர் பிரிந்தது... இல்லை
பிரித்திட்டார் உம்மை எம்மிடமிருந்து
இரக்கமில்லா இலங்கை அரக்கர்கள்.
ஐந்து ஆண்டுகள் ஆயினும் — நாம்
மறவோம் உன் நாமத்தை — எம்
நினைவெல்லாம் நீங்கள் ஐயா! என்றும்
நீங்காது இடம் பெறுவீர்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும் உங்கள்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரணவாய் வடக்கு,
கரவெட்டி. (2781)

யோர வியாபாரங்களும் யாழ், மாநகரசபை எல்லைக்குள் அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 10.07.1992. (சி/4678)

## நினைவஞ்சலி

வீரஜனனம் 08 — 11 — 1970



வீரச்சாவு: 30 — 05 — 1992

## கப்டன் பாவாணன் (கெனடி)

(பத்மநாதன் மயூரன்)

களம் பல கண்டதனால் கப்டன்
தமிழ் பல கற்றதானல் பாவாணன்
உயிர் தனை ஈந்ததானல் மாவீரன்
அன்புடன் நினைவு கூரும்
- குடும்பத்தினர்

சுதர்சன் வீதி
புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
புன்னாலைக் கட்டுவன்.

குறிப்பு:- (தவிர்க்க முடியாத காரணத்தால் 13-07-92 திங்கட்கிழமை நடைபெற இருந்த அந்தியேட்டி கிரியைகள் பிற்போடப்பட்டுள்ளது)

(2798)

மதுரங்குளம் பகுதியில் எமது முகாம் ஒன்றின்மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**அரசன்** (யோகநாதன்-பன்குளம், திருக்கோணமலை)

**கேதீஸ்** (திருக்கோணமலைநகர்)

மன்னார்-மாந்தைப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப். வேதமணி / செட்டி** (அப்புசாமி செட்டியாண்டி - இசக்கங்குளம், வட்டக்குளம், அடம்பன், மன்னார்)

**2 ஆம் லெப். மயூரன் ராசன்** (சண்முகநாதன் சந்திரகுமார்-வினாயகபுரம், முழங்காவில், மன்னார்)

மன்னார்-தள்ளாடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப. மில்டன்** (கிருஸ்ணபிள்ளை தேவகுமார் - தருமபுரம், கிளிநொச்சி)

**பாரதி** (செபஸ்தியான் பாலஅந்தோனி- 11ம்படிவம், தருமபுரம், கிளிநொச்சி)

**கலைஞன்** (தங்கராசா சுரேஸ்-சிவன்கோயில்வீதி)

அம்பாறையில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவன் உட்பட, மத்திய முகாம் 4ஆம் குடியிருப்பைச் சேர்ந்த 4 - தமிழர்கள்.

திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட் 3-ம் கட்டை அரசினர் பாற் பண்ணை ஊழியர்களான ஐந்து தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா முகாம் தகர்ப்பு முயற்சிக்காக மேற்கொள்ளப்பட்ட ஆகாய-கடல் - வெளி நடவடிக்கைகளின் போது அப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனானமோதலில் வீரச்சாவெய்திய-

**தினேஷ்** (ஒப்பிலாமணி தெய்வேந்திரன் - கங்குவேலி, மூதூர், திருக்கோணமலை.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4679)

சிந்தனைக்கு

எறும்புகள் சிறந்த குடிகள்; ஏனெனில் தங்கள் இனநலனையே தலையானதாகப் போற்றுகின்றன அவை.
— ஹென்றி டேவிட் தோரோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தமிழ்க் குழுக்களின் அவல நிலை

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு பிரயோசனமற்றதாகமுடிந்து விடுமோ என்ற ஐயம் எனக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ளது" இவ்வாறு யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி (ஈ. பி. ஆர். எல். எவ்) பாராளுமன்ற உறுப்பினர் கே. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும் "பெரும்பான்மைக் கட்சிகள் ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்யாத வரை எந்தவித பிரயோசனமும் ஏற்படாது." என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி வரிசையில் உள்ள யாழ். மாவட்ட எம். பி. பிரேமச்சந்திரன் மட்டும் இவ்வாறான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. அரசாங்கத் தரப்பிற்கு ஆதரவாகச் செயற்படும் தமிழ் குழுக்களே தமது அவலமான நிலையை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளன. அண்மையில் கொழும்பு பத்திரிகைகளுக்கும் பேட்டி அளித்த முன்னாள் ஈரோஸ் பிரமுகர் சங்கர்ராஜி புளொட் இயக்கத் தலைவர் சித்தாத்தன் போன்றோர் 'ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு' சமாதான வழிக்கு திரும்பிய தமக்கு அரசாங்கம் போதிய ஊக்கம் கொடுப்பதாக இல்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர். மேலும் அரசாங்கத்தின் இப்போக்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் நிலைப்பாட்டை சரி என ஏற்பதற்கும், ஆயுதப் போராட்டம் பக்கம் சாய்வதற்கும் வழி ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர். அதாவது தவிர்க்க முடியாது புலிகளின் நிலைப்பாடு சரியானதெனத் தெரிவிக்க வேண்டிய அவல நிலையை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இத்தமிழ்க் குழுக்களின் இன்றைய அவல நிலைபற்றி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரான அஸ்ரப்பே கவலை தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் பாராளுமன்றத்தில் பேசிய அஸ்ரப் "ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, இந் நாட்டின் தேசிய அரசியல் பொது வோட்டத்தில் நம்பிக்கை வைத்த தமிழ்க்குழுக்களைப் பார்க்க மிகவும் வருத்தமாக இருக்கின்றது" எனத் தெரிவித்தார்.

தமிழர் தேசிய பிரச்சினை இன்று நேற்று ஏற்...

# புலிகளுடன் பேசுவதைத் தவிர அரசுக்கு வேறுவழி எதுவுமில்லை



இலங்கையின் எதிர்காலம் வெளியுலகில் இருந்து ஒதுங்கி வாழும் தன்மையை பெருமளவுக்கு கொண்ட மிகவும் முன் ஜாக்கிரதையான இருவரிலேயே தங்கியிருக்கிறது ஒருவர் நாட்டின் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா. மற்றவர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

உலக வரைபடத்திலே இலங்கை தனியொரு நாடாக தொடர்ந்தும் காட்டப்படுமா அல்லது மத்திய ஐரோப்பாவின் யூகோஸ்லாவியா மற்றும் செக்கோஸ்லவேக்கியாவின் அணியில் சேர்ந்து இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான துண்டுகளாகப் போகுமா என்பதை இந்த இருவரும் தங்களது அரசியல் சதுரங்கத்தை ஆடும் பாணியே தீர்மானிக்கும்!

"இராணுவப்படையெடுப்பு நடவடிக்கைகளும் ஒரு தீர்க்கமான கட்டத்திற்கு இட்டுச்செல்வதாக இல்லை. அரசியல் ரீதியான தீர்வுக்கான முயற்சிகளும் முடக்கம் அடைந்துள்ளன இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதைத் தவிர ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு வேறு மார்க்கங்கள் அனேகமாக இல்லை" இவ்வாறு கூறுகிறார் கொழும்பிலுள்ள 'இந்து' பத்திரிகையின் அரசியல் ஆய்வாளரான தோமஸ் ஏபிரஹாம் இன்றைய அரசியல்-இராணுவ

## இன்றைய அரசியல் - ராணுவ நிலைபற்றி இந்து

என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவ நிலையை நோக்குவது பயனுடையதாக இருக்கும். இலங்கையில் இருந்து இந்திய அமைதி காக்கும் படையின் கடைசி ஜவான் வெளியேறிய இரண்டு மாத காலத்தில் 1990 ஜூனில் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையேயான தற்போதைய சுற்றுப் போர் ஆரம்பமானது. அந்த நேரத்தில் வடக்கில் - கிழக்கில் அரசியல் - இராணுவக் கட்டுப்பாடு புலிகளின் கைகளிலேயே இருந்தது. பின்னர் கிழக்கு மாகாணத்தின் பிரதான நகரங்கள் கிராமங்களில் இருந்து இராணுவத்தினர் புலிகளை விரட்டியதுடன் சிவில் நிர்வாகம் மீதான கொழும்பின் அதிகாரத்தை ஒரு அளவுக்கு மீண்டும் நிலைநாட்டக் கூடியதாகவும் இருந்தது. ஆனால் புலிகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து அகன்று விடவில்லை.

காடுகளுக்குப் பின்வாங்கிச் சென்ற புலிகள் தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்கள் மூலமாக இராணுவத்துக்கு அயரா தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

மறைந்து இருந்து நடாத்தும் தாக்குதல்கள் மற்றும் கண்ணிவெடித் தாக்குதல்களினால் புலிகள் இராணுவத்தினரில் பலரின் உயிரைப் பலியெடுத்து வருகிறார்கள். புலி திரட்டுவதற்குப் போதியளவு பணத்தைக் கொடுக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை. சர்வதேச உதவியில் பெரிதும் தங்கியிருக்கும் பொருளாதாரம் ஒன்றுக்கே பிரேமதாசா தலைமை தாங்குகிறார். அரசாங்கம் பின்பற்றி வரும் சுதந்திர சந்தைப் பொருளாதார கொள்கைக்கு ஆதரவாக உலகவங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இதுவரை செயற்பட்டு வந்துள்ளன. அத்துடன் இந்த இரு நிறுவனங்களும் தாராளமான நிதிப் பங்களிப்பையும் இலங்கைக்குச் செய்திருக்கின்றன. ஆனால் தற்போதைய போர் தொடர்ந்து நீடிக்குமேயானால் உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் இந்தப் பெருந்தன்மை தொடர்வதற்கில்லை.

இந்த வருடத்திற்குப் பின்னரும் போருக்கு நிதியளித்துக் கொண்டிருப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பதை அரசாங்கத்தின் உள்வட்டாரங்கள் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கின்றன

எனவே இராணுவ ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதிகவோ ஒரு விரைவான தீர்வு அவசியமாகிறது. ஆனால் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வொன்று சாத்தியமானதல்ல.

இனநெருக்கடிக்கு அரசியல் முடிவு ஒன்றைக் காணும் வாய்ப்புக்களும் பிரகாசமானவையாக இல்லை. கடந்த 40 வருட காலமாக சுயாட்சிக்கான தமிழர்களின் கோரிக்கை தொடர்பாக இலங்கையில் சிங்களவர்களும், தமிழர்களும் இணக்கப் பாடொன்றுக்கு வர முடியாமல் இருக்கிறது. சிங்களப் பெரும்பான்மையினரின் வாக்குகள் மீதே கண்ணும் கருத்துமாயிருக்கும் ஒவ்வொரு அரசாங்கமும் தமிழர் கோரிக்கை தொடர்பாகக் கடினமான நிலைப்பாட்டையே எடுத்து வந்திருக்கின்றன.

### வாக்குகளின் கைதி

பிரேமதாசாவைப்பொறுத்த வரை அவர் தனக்கு முன்னர் ...

களுக்கும் குறைபாடுகளுக்கும் மத்தியிலும் தெரிவுக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்கா தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சர் எஸ். தொண்டமான் போன்ற தலைவர்கள் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஏற்புடையதான தீர்வு திட்டம் ஒன்றை வகுப்பதை நோக்கிய தெரிவுக்குழுவின் செயற்பாட்டு முயற்சிகளை உறுதி செய்வதில் கரிசனையுடன் பணியாற்றுகிறார்கள்.

வகுக்கப்படக்கூடிய எந்த ஒரு சமாதானத் தீர்வுத்திட்டத்திலும் தமிழ் சுயாட்சிப் பிராந்தியம் ஒன்றுக்கான ஏற்பாடு இருக்க வேண்டும் என்று பொதுவான இணக்கப்பாடொன்று ஏற்பட்டிருக்கிறது. அந்தப்பிராந்தியத்தின்எல்லை தொடர்பாகவே சர்ச்சை!

### எதிரெதிர் நிலைப்பாடுகள்

தமிழ்ப் பிராந்தியம் ஒன்றை அமைப்பதற்காக வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் தமிழர்கள் உறுதியாக நிற்கிறார்கள். கிழக்கு சனத்தொகையில் கணிசமான எண்ணிக்கையைக் கொண்ட சிங்களவர்களும் முஸ்லிம்களும் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தனித்தனியானவையாகவே இருக்கவேண்டுமென்பதில் அதேயளவுக்கு உறுதியாக நிற்கிறார்கள்

இந்த இரு நிலைப்பாடுகளுக்கும் இடையே ஒரு விட்டுக்கொடுப்பு இணக்கப்பாட் தரமான உணர்வுகளுக்கு தீனிபோடும்நிலைப்பாடுகளிலேயே சிக்குப்பட்டு நிற்கின்றன. ஐ.தே.க.வும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றையொன்று தாக்குவதற்கே இனப்பிரச்சினையை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றன. இதையே கடந்த 40 வருடகாலமாகச் செய்தும் வருகின்றன.



சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்தலைவர்ஒருவர் மனதைத் திறந்து கூறியதைப்போல ஐ.தே.க வும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை பூனை - எலி விளையாட்டாகவே கருதிச் செயற்படுகின்றன.

எனவே ஜனாதிபதி பிரேமதாசா இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையோ அல்லது அரசியல் தீர்வொன்றையோ காணமுடியாத சிக்கலான சூழ்நிலை ஒன்றில் சிக்கி இருக்கிறார். இதில் இருந்து மீள ஒரு வழி புலிகளுடன்

"இலங்கையில் தனித்தமிழ் நாடொன்றை உருவாக்குவதில் புலிகளின் தலைவருக்கு இருக்கும் உறுதிப்பாடு சந்தேகத்திற்கு இடமற்றது. இந்த இலட்சியத்திற்காக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் உயிர்களையும் தியாகம் செய்ய அவர் தயாராகியிருக்கிறார். அத்துடன் தமிழ் ஈழம் என்ற இலட்சியத்தை அடைவதற்காகத் தனது உயிரைக் கூட துச்சமாக

றது'' எனத் தெரிவித்தார்.

தமிழர் தேசிய பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ''இலங்கையின் சுதந்திரத்தின்'' முன்னரே முளைவிட்ட பிரச்சினையாகும். சுமார் 50 வருடத்திற்கு மேலாக இலங்கையின் வரலாற்றில் நீடிக்கும் இப்பிரச்சினை முனைப்பான பிரச்சினையாக இருந்து தொடர்ந்தும் வருகின்றது.

ஆனால் இப்பிரச்சினையை தீர்க்க சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதும் இதயசுத்தியுடன் தொழிற்படவில்லை. நெருக்கடிகள் ஏற்படும் போது அவற்றைத் தவிர்க்கவென பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் என காலத்திற்குக்காலம் மேற்கொண்டார்களே ஒழிய அவற்றை அமுல்படுத்தவோ பிரச்சினைக்கு தீர்வு காணவோ முற்படவுமில்லை.

இதேவேளை சிங்களத் தலைவர்களுடன் அன்று, பிரச்சினைக்குத் தீர்வு காணப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களாகவும் மக்களின் ஆதரவைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். அத்தோடு சாத்வீகப் போராட்டத்தையேனும் நடத்த ஓரளவேனும் சக்தி பெற்றவர்களாகவும் இருந்தனர். போராட்டம் சிலவற்றையும் நடத்தினர்.

இவ்வாறு இருந்தும் சிங்களப் பேரினவாதிகளும் அரசியற்தலைவர்களும் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படவில்லை. தமிழ் தலைவர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி அவர்களைத் தோற்கடிப்பதிலும் பிரச்சினையை இழுத்தடிப்பதிலுமே தமது கவனத்தைச் செலுத்தினர்.

இந்நிலையில், மக்களுடன் தொடர்பே அற்ற ஒரு பகுதியினர் கொழும்பில் நின்று கொண்டு இனப்பிரச்சினைக்கு சிங்கள அரசாங்கம் தீர்வு காணும் என்பதும், அதன் மூலம் தாங்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றலாம் எனவும் எண்ணியது எந்தளவு மடத்தனமானது. இவர்கள் கடந்த வரலாற்றைப் புரியத் தவறிவிட்டார்கள் புலிகள் இல்லாவிட்டால், தமது அரசியலில் தாமேஇல்லை என்பதை இக்குழுக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். மேலும், சிங்களப் பேரினவாதம், புலிகளுக்கு மட்டுமல்ல, தமிழ் தேசியவாதத்திற்கும் தமிழ் மக்கள் அனைவருக்குமே எதிரானது என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் நல்லது. இதில் கொழும்பிலுள்ள இவர்களும் விதிவிலக்கல்ல.

சியல் ஆய்வாளரான தோமஸ் ஏபிரஹாம் இன்றைய அரசியல்-இராணுவ சூழ்நிலையை விமர்சிக்கும் தோமஸ் ஏபிரஹாமின் கட்டுரையை இங்கு தருகிறோம்.

இருவருமே மூர்க்கத்தனமான உறுதிப்பாட்டைக் கொண்டவர்கள். தங்களது இலக்குகள் எவை என்பதை தெளிவாகத் தெரிந்து புரிந்து கொண்டவர்கள். பிரேமதாசவைப் பொறுத்த வரை தனது நாட்டை தொடர்ந்தும் ஐக்கியப்பட்ட ஒற்றையாட்சி நாடாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அத்துடன் கொடூரமான பிரிவினைப் போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் மீண்டும் அமைதியை நிலை நாட்டியவர் என்று சரித்திரத்தில் இடம் பெற வேண்டும் என்றும் நோக்கம் இருக்கிறது. பிரபாகரனைப் பொறுத்தவரை நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் தனியான தமிழ்நாடு ஒன்றை உருவாக்க வேண்டியிருக்கிறது. அத்துடன் தமிழர்கள் இழந்த பெருமையையும் கௌரவத்தையும் மீண்டும் பெற்றுக் கொடுத்த போராளி என நினைவு கூரப்பட வேண்டும்என்று அவாவும் இருக்கிறது.

இவர்கள் இருவருமே தங்களது இலக்குகளை அடைவதென்பது எளிதாக இருக்கப் போவதில்லை.

முதலில் இலங்கை ஜனாதிபதி எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வோம்.

தனது இராணுவத்தினால் வெற்றி பெற முடியாத- தள்ளாடும் பொருளாதாரத்தினால் தொடர்ந்தும் தாக்குப் பிடிக்கமுடியாத கிளர்ச்சியை அடக்குவதற்கான போர் ஒன்றில் பிரேமதாசா மூழ்கிக் கிடக்கின்றார்.

## வெல்ல முடியாத போர்

இந்தப் போர் வெல்ல முடியாததாக ஏன் இருக்கிறது, களை வலுவிழக்கச் செய்வதில் இராணுவத்தினர் வெற்றி பெறவில்லை என்பது. அதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

## சஞ்சலமான நிலைமை

வடக்கைப் பொறுத்தவரை இராணுவமும் புலிகளும் எட்ட எட்ட நின்று கொண்டு ஒரு சஞ்சலமான நிலைமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். குடா நாட்டிற்குப் பிரவேசிப்பதற்கான வாயில் போன்று அமைந்திருக்கும் வவுனியா நகர் மற்றும் மன்னார்த் தீவு, யாழ் குடாநாட்டுக்கு அப்பால் இருக்கும் தீவுப் பிராந்தியங்களை இராணுவம் அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ஆனால் தமிழ் பிராந்தியத்தின் மையப் பகுதியான யாழ்ப்பாணம் புலிகளின் உறுதியான கட்டுப்பாட்டின் கீழேயேஇருக்கிறது. குடாநாட்டுக்குள் கொழும்பின் அதிகாரம் செல்லவில்லை. அங்கே புலிகள்தான் அரசாங்கம். போதுமான மனிதசக்தி இல்லாதிருப்பதே இராணுவத்தின் பிரதான பலவீனமாக இருக்கிறது. சுமார் 70 ஆயிரம் பேரைக் கொண்ட இராணுவம் புலிகளை விட பெரிதாகவும், நன்கு ஆயுதந்தரித்ததாகவும் இருக்கிறது. ஆனால் இந்த மேலாதிக்க நிலையை மேலும் முன்னெடுத்து வடக்கு - கிழக்கை முற்றாக அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குப் போதுமான ஆள்பலம் இராணுவத்திடம் இல்லை.

## நிதி நெருக்கடி

இராணுவம் அதற்குத் தேவையான ஆள்பலத்தைத்

வரை அவர் தனக்கு முன்னர் அதிகாரத்தில் இருந்தவர்களை விட கூடுதலான அளவுக்கு தமிழர்களுடன் இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கான விருப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவரும் சிங்கள வாக்குகளின் சிறைக் கைதியே!

தமிழர்களுக்கு தன்னால் வழங்கப்படக்கூடிய எந்த ஒரு சலுகையும் தன்னை பிரதான சிங்கள எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தாக்குதலுக்கு இலக்காகிவிடும் என்பதே பிரேமதாசாவின் பிரதான பயமாக உள்ளது.

எனவே இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சமாதான தீர்வுத் திட்டம் எனத்தான் கருதுகின்ற திட்டத்தை வெளிக்காட்டிக் கொள்ளாதிருக்க அவர் விரும்புகின்றார். ஆனால் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகையை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழு சமாதானத் தீர்வுத் திட்டம் ஒன்றை வகுக்கட்டும் என்று கூறிவிட்டார். அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள தயாராகயிருப்பதாகவும் உறுதி அளித்திருக்கிறார்.

## பிரதான கட்சிகளின் பங்களிப்பு

பாராளுமன்ற தெரிவுக்குழு அத்தகைய குழுக்களுக்கு உரித்தான பாணியில் விட்டு விட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தெரிவுக்குழுவின் பணிகளுக்கு எந்த விதமான கரிசனையுடனான பங்களிப்பையும் செய்யவில்லை. இக்கட்சிகளின் இத்தகைய செயற்பாடுகள் தெரிவுக்குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கு உதவிகரமாக இல்லை.

எவ்வாறெனினும் குந்தகங்

வதற்காக் தனது உயிரைக் கூட துச்சமாக மதிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெளிவாகக் கூறி இருக்கிறார்.''

டை கண்டு பிடிக்க வேண்டியதே தெரிவுக்குழுவின் முன்னுள்ள பணியாகும். இணைந்த வடக்கு- கிழக்குப் பிராந்தியத்தில் கிழக்கு முஸ்லிம்களுக்கென சுயாட்சி அமைப்பொன்றை வழங்கும் தீர்வுத் திட்டத்தை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளும் சாத்தியம் உண்டு.

## இது ஒரு யோசனை

இன்னொரு இணக்கப்பாட்டுத் திட்டத்தை நோக்கி தெரிவுக் குழுவின் தலைவர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். வடக்கு மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் தனித் தனியான சபைகள் இரண்டு சபைகளினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க ஓர் உயர் மட்ட அமைப்பு. இது இரண்டு மாகாணங்களையும் நிர்வகிப்பதற்கு தனியான ஒரு அமைப்பை தமிழர்களுக்கு கொடுக்கும்; அதேவேளை கிழக்கு மாகாணம் தனியானதாகவே இருக்கிறது என்று சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் திருப்திப்பட வைக்கும்.

இந்த இரண்டு யோசனைகளினதும் வெற்றி ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் காட்டக் கூடிய விருப்பில் தான் தங்கியிருக்கிறது. அத்துடன் தமிழர்களுக்கு ஏற்புடையதாக இருக்க கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை இரு தரப்பினரும் வகுக்க விருப்புக்கொள்ளவும் வேண்டும்.

## தைரியம் இல்லை

ஆனால் இந்தக் காரியத்தை செய்வதற்கான தைரியத்தை இந்த இரு கட்சிகளில் எந்த ஒன்றுமே வெளிக்காட்டவில்லை. இரு கட்சிகளுமே சிங்கள பேரினவாதத்தின் கீழ்த்

நேரடிப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதே. ஆனால் இதில் மீண்டும் பல அரசியல் ஆபத்துக்கள் இருக்கின்றன.

இலங்கையில்இந்தியஅமைதி காக்கும் படை நிலைகொண்டிருந்த காலகட்டத்தின் இறுதிப் பகுதியில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கியமைக்காக ஏற்கனவே பலத்த கண்டனங்களுக்கு இலக்காகி வருபவர் பிரேமதாசா. சிங்கள எதிரணியினரும் இராணுவத்தினரும் பௌத்த குருமார் மற்றும் முன்னாள் சகாக்களான லலித் அத்துலத்முதலி காமினி திசாநாயக்கா ஆகியோரும் பிரேமதாசாவை சிங்கள மக்களுக்கு துரோகமிழைத்தார் என்று கண்டனம் செய்வர்.

இதுதவிர இலங்கைஅரசாங்கம் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றா; இருக்காது என்பதை இந்தியாவும் தெளிவாக உணர்த்தி இருக்கிறது.

## புலிகளின் வரையறைகள்

பிரபாகரனின் நிலையும் பெருமளவுக்கு மேம்பட்டதாக இல்லை இலங்கையில் தனித்தமிழ் நாடொன்றைஉருவாக்குவதில் புலிகளின் தலைவருக்கு இருக்கும் உறுதிப்பாடு சந்தேகத்திற்கு இடமற்றது இந்த இலட்சியத்திற்காக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் உயிர்களையும் தியாகம் செய்ய அவர் தயாராகியிருக்கிறார். அத்துடன் தமிழ் ஈழம் என்ற இலட்சியத்தை அடைவதற்காக தனது உயிரைக்கூட துச்சமாக மதிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெளி

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாதம்

# கொள்கையில் உறுதியாக நின்றார் கோவையின் தனிச்சிறப்பு அதுவே

## நினைவுக் கூட்டத்தில் யோகி

தமிழீழ விடுதலைப் புலிகள் தான் உண்மையான தேசிய விடுதலை இயக்கம் என்பதை நேரததோடு புரிந்து கொண்டவர் கோவை மகேசன் அவர்கள். இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நேற்று இடம் பெற்ற கோவை மகேசன் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. யோகி அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், ஒருகாலத்தில் போராட்டம் குறித்து உணர்ச்சி பொங்கப் பேசியவர்கள் எழுதியவர்களில், சிலர் போராட்டத்தைக் கைவிட்டார்கள் சிலர் காட்டிக் கொடுத்தார்கள்.

போராட்ட உணர்வோடு செயல்புட்ட பலர் ஆயுதப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிப்போனார்கள் திரு.கோவை மகேசன் எப்போதும் தமிழீழக் கொள்கையில் உறுதியாக நின்றார் அதுவே அவரது தனிச்சிறப்பாகும்.

83ஆம் ஆண்டிற் குப்பின் விடுதலைப் புலிகளின் ஆதரவோடு வீரவேங்கை என்ற பத்திரிகை நடாத்தியபோது, நாம் திம்புப் பேச்சுவார்த்தைக்குச் சென்றபோது, அரசியலில் உங்கள் வாழ்க்கையில் எப்போது வேதனை அடைந்தீர்கள் என்ற கேள்விக்கு ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள் உச்சக்கட்டத்தை அடையும்போதெல்லாம் பேச்சுவார்த்தை சமரசம் உடன்படிக்கை என்று பிசுபிசுத்துவிடுகின்றன. பாராளுமன்ற அரசியலை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பிறகுதான் தமிழனின்கௌரவம் உயர்ந்து வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் இந்தியாவின் நிர்ப்பந்தத்தினால் தமிழீழப்போராளிகள் திம்புவில் நடைபெறும் சமரசப் பேச்சுவார்த்தைக்குச் சென்றது முதல் நான் நிம்மதியிழந்து தவிக்கிறேன். உலக மட்டங்கிலும் வாழும் ஆறு கோடித் தமிழர்களும் நம்பிக்கை வைத்துள்ள தலைவர் தம்பி பிரபாவும் தமிழ் ஈழ இலட்சியத்தில் கிஞ்சிற்றும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதே எனது பெரிய நம்பிக்கை. விடுதலைப் புலிகள் இன்று விட்டுக் கொடுத்தால் தமிழீழ மக்களுடைய சுதந்திரம் மேலும் 50 ஆண்டுகளுக்கு பின் தள்ளப்பட்டு விடும் என்று திரு. கோவை மகேசன் பதிலளித்திருந்தார்.

நான் அவரை பலமுறை சந்தித்து பேச்சுவார்த்தை குறித்து விளக்கியும் அவர் எழுதிய பதில் அது.

இதுகுறித்து நான் தலைவர் பிரபாகரனை சந்தித்து இவர் இப்படி எழுதுகிறாரே என்று கேட்டபோது அவர் சிரித்தார்.

'40 ஆண்டுகால தலைமைகள் பேச்சுவார்த்தை என திசைமாறியதைப் பார்த்தவர் எங்கே பிரபாகரனும் மாறி விடுவானோ என நினைக்கிறார் போலும்' என்றார்.

இது அவருக்கு தமிழீழ இலட்சியத்தின் மீது இருந்த பற்றையும், எம் இயக்கம் போராட்டத்தைக் கை விட்டால் என்ன நடக்கும் என்ற அவரின் பயத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இந்தியப் போர் தொடங்கிய பின் இந்தியாவில் இருந்து கொண்டு இந்தியப் படையின் கொடுமைகளைத் துணிச்சலாகக் கண்டித்தார் என திரு. யோகி தெரிவித்தார்.

இந் நினைவுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. தேவர் அவர்கள் உரையாற்றுகையில் கோவை அண்ணன் அவர்கள் ''வீரவேங்கை'' இதழை ஆரம்பித்து ''சுதந்திரன்'' மூலம் தான் ஆற்றிய பணியினைத் தொடர்ந்து நடத்தினார்.

'வீரவேங்கை என் பிழைப்புக்காக நடத்தப்படும் ஏடன்று. தமிழ் மக்களின் மானத்தையும், வீரத்தையும் பாரெங்கும் பறையறைந்து - தமிழீழ விடுதலைப் போராளிகளான விடுதலைப் புலிகளின் வலது கரமாக எங்கள் தாயகத்தை மீட்கும் வரை தமிழ் நாட்டில் இருந்தாலென்ன தமிழீழத்தில் இருந்தாலென்ன என் கடைசி மூச்சு நிற்கும் வரை என் எழுத்துப்பணி தொடரும்'' என்ற உறுதியோடு வீரவேங்கை பத்திரிகையை நடத்தி வந்தார்.

பிரபாகரனே தமிழீழத் தேசியத் தலைவர் விடுதலைப் புலிகளே தேசிய விடுதலை இயக்கம் என்பதில் கோவை அண்ணன் உறுதியாக இருந்தார் என்று தெரிவித்தார்.

## புலிகளுடன்

வாகக் கூறியிருக்கிறார் ஆனால் வடக்கு-கிழக்கிலே இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது இருக்கும் பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற புலிகளால் இயலாமல் இருக்கும் என்பதும் வெளிப்படையானது. இராணுவத்தினருக்கு தொடர்ந்து தொல்லைகளை கொடுத்து அவர்களை பலி எடுத்துக் கொண்டிருக்கவும் தமிழ் பகுதிகளில் கொழும்பு அதன் அதிகாரத்தை செலுத்துவதை தடுக்கவும் புலிகளால் முடியும்

பேச்சுக்கு வரவேற்பு

போர்நிறுத்தம் ஒன்றை பிரகடனம் செய்விக்கவும் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவும் பிரேமதாசாவை தூண்டுவதற்கான வழிகளை பிரபாகரன் நோக்கிக்கொண்டிருக்கிறார். பேச்சுவார்த்தைகளை தாங்கள் வரவேற்பதாக புலிகளின் பேச்சாளர்களான அன்ரன்பாலசிங்கம் மற்றும் யோகரட்னம்யோகி போன்றோர் யாழ்ப்பாணத்தில் வெளிப்படையாக கூறியிருக்கிறார்கள்யுத்தநிறுத்தத்தை பயன்படுத்தி தங்களது படைகளை மீளவும் அணி சேர்க்கவும்புதிய போராட்டத்துக்கு தயாராகவுமே புலிகள் விரும்புவர் என்பதே விடயம் புலிகளின் நீண்டகால இலட்சியங்களுக்கான பாதையில் போரநிறுத்தம் என்பது ஒரு தத்தை பிரயோகிக்கக்கூடிய தான முன் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக இருத்தலாகாதுஎன்று புலிகள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

யதார்த்த ரீதியாக நோக்குகையில் சண்டையை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய தேவை பிரேமதாசாவுக்கும் பிரபாகரனுக்கும் இருக்கிறது. தற்போதைய இராணுவ பல நிலையை முடக்கக் கூடியதும் யாழ்ப்பாணத்திலான தங்களது கட்டுப்பாட்டை தொடருவதற்கு அனுமதிக்கக் கூடியதுமான அறிவிப்பொன்றை அரசாங்கத்திடம் இருந்து புலிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய அறிவிப்பொன்றை பிரேமதாசாவினால் செய்ய முடியாது. ஏனென்றால் அது எதிரணியிடம் இருந்து கண்டனக் குரல்களை கிளம்பச் செய்யும்.

இராணுவ நடவடிக்கைகளும் தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு இட்டுச் செல்வதாக இல்லை. அரசியல் ரீதியான தீர்வுக்கான முயற்சிகளும்முடக்கம் அடைகின்றன. பணமும் விரயமாகிக் கொண்டிருக்கிறது. இந் நிலையில் புலிகளுடன் பேசுவதைத் தவிர, இலங்கை ஜனாதிபதிக்கு வேறு மார்க்கங்கள் அனேகமாக இல்லை என்றே தோன்றுகிறது.

சமாதானப் பேச்சு வார்த்

## சென்னைக்கு அருகே இந்தியக் கடற்படை ஒத்திகை

(சென்னை)

சென்னைக்கு அருகே வங்கக் கடலில் கடற்படை ஒத்திகையில் இந்தியக் கடற்படை ஈடுபட்டுள்ளது. இதற்காக இந்தியக் கடற்படையின் மேற்கு மற்றும் கிழக்குப் பிராந்தியக் கடற்படைக் கப்பல்கள்சென்னைக்கு கொண்டு வரப்பட்டன. இந்தியக் கடற்படையின் அதி நவீன கப்பலான ஐ. என். எஸ். கிராத், விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சு விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என்பனவும் இந்த ஒத்திகையில் ஈடுபடவிருக்கின்றன. எதிர்வரும் இருபத்து நான்காம் திகதி வரை நீடிக்கும் இந்த ஒத்திகைக்கு, மேற்கு பிராந்திய தளபதி றியர் அட்மிரல் ஏ. ஆர். தாந்தன், கிழக்கு பிராந்திய தளபதி றியர் அட்மிரல் டி. எஸ். விஷ்ணுபகவத் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

## திருமஞ்ச வெள்ளோட்டமும்

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார திருவிழா நாளை திங்களன்று ஆரம்பமாகிறது. 25 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இந்த உற்சவங்களில் தினமும் மாலை 6. 30 மணி தொடக்கம் 7. 30 மணிவரை காரை நகர் கம்பன்கழக அமைப்பாளரும் யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய த. சிவகுமாரன் அவர்கள் பெரியபுராண தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

15-07-92 திருமஞ்ச வெள்ளோட்ட விழாவும். பன்னிரண்டாம் நாளாகிய (24-07-92) அன்று பிற்பகல் 5. 00 மணிக்கு விசேட பூஜையைத் தொடர்ந்து புதிய மஞ்சத்தில் சுவாமி வெளிவீதி வலம் வருதலும் நிகழும்.

இறுதி நாளாகிய 25-07-92 அன்று அன்னதானமும் பஞ்சமுக அர்ச்சனையும் இடம் பெறும்.

விழாக்காலங்களில் வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் முதலிய விசேட நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## ஆய்வு வட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் நாவலர் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு சைவசித்தாந்த ஆய்வு வட்டம் தனது மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது.

## மருந்து கலவையாளர் ஆலோசனைக் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் பிரதேசசபைகளால் நடாத்தப்பட்டுவரும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமை

## 6 ஆயிரம் இல. தமிழ் அகதிகள் விரைவில் அனுப்பப்படுவர்

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் ஆறாயிரம் பேர் விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவர் என்றும் இவர்களில் சுமார் நான்காயிரம் பேர் திருக்கோணமலைக்கும் மிகுதியானவர்கள் மன்னாருக்கும் அனுப்பப்படவுள்ளனர் என்றும், கோயம் புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் சுமார் இருபத்து மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர் என்றும் மேலும் எண்பத்து எட்டாயிரம் பேர் தமிழகத்தில் தங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## வளலாயில் வீரச்சாவடைந்த நான்கு வீரவேங்கைகள்

வளலாய்ப் பகுதியில் 10. 07. 1992 அன்று நடைபெற்ற காவலரண் தாக்குதலின் போது நான்கு வேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்.




கப்டன் செங்கதிர்
(லுக்மன் வலிதியான் சின்னத்தம்பி மறைக்காடு குடத்தனை)



லெப்டினன்ட் சுடரொளி
(தீபன்-குழந்தைவடிவேல் ரமேஸ்இரண்டாம் குறுக்குத் தெருபருத்தித்துறை)



2ஆம் லெப்டினன்ட் இந்திரன்
(மயில்வாகனம் சந்திரன் முள்ளி வீதி அரியாலை)



2ஆம் லெப்டினன்ட் நாவலன்
(முனியாண்டி குமார் சிவபுரம் மல்லாவி கிளிநொச்சி)

## ஓராண்டு நினைவஞ்சலி

## மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை வீரசிங்கம்

போரா நிறுத்தம் என்பது ஒரு தந்திரோபாய ரீதியான நடவடிக்கையாகவே இருக்கும் இதன் நிமித்தம் எந்தவொரு பேச்சுவார்த்தையும் அல்லது யுத்தநிறுத்தமும் தாங்கள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்

சமாதானப் பேச்சு வார்த்தைக்கான ஒரு முன்னோடியாக புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பகிரங்கமான அல்லது இரகசியமான தொடர்புகள் ஏற்படுவதை அடுத்த ஒரு சில மாதங்களில் காணக் கூடியதாக இருக்கும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை தலைமையகம்

## பதவி வெற்றிடம்

1. ஆங்கில ஆசிரியர்
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர் ஆசிரியர்
3. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் ஆசிரியர்

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமைகள், அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் விரும்பப்படுவர்.

தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர்களுக்கு செய்முறைப் பரீட்சை 24-07-92 பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கான செய்முறைப் பரீட்சை 25-07-92 பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். தமது தட்டச்சு இயந்திரங்களைக் கொண்டு வரவும்.

விண்ணப்பப் படிவங்கள் யாவும் 23-07-92க்கு முன் கிடைக்கக் கூடியதாக எமக்கு அனுப்பி வைக்கவும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

### தமிழ் ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிலும் மாணவர்கள்


மேற்படி கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை 24-07-92க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். இதற்கான நேர்முகப்பரீட்சை 30-07-92 இல் நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
11-07-92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
(சி/4686)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வீர உதயம்
27 — 07 — 1971



வீர அஸ்தமனம்
22 — 07 — 1991

## கப்டன் அரசன்

சோமசேகரம்–யோகேந்திரன்

திதி:- 12-07-1992

மண்மீட்புப் பணிக்குச் சென்ற
அண்ணனின் வழியே சென்றாய்!
நாமமும் ''அரசன்'' ஆனாய்!
இந்தியப் படையில் இரண்டு
ஆண்டுகள் சிறையில் வாழ்ந்தும்,
வீறுடன் பணி தொடர்ந்தாய்!
ஆனை இறவு முகாம்,
போரிலே களம் குதித்தாய்
வருவாய் என நாமிருக்க,
கொடியவர்கள் ஏவி விட்ட
குண்டுக் கிரை ஆனாயே!
இப்பிறப்பில் இனி உம்மைக்
காண்பது என்றோ ஐயா!

இவருடன் களப்பலியடைந்த சக போராளிகளினதும் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று (12-7-1992) நிகழும் நினைவஞ்சலியில் இயக்க உறுப்பினர்கள், உறவினர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

''அரசன்'' வீதி
நடுத்தெரு ஒழுங்கை,
அரியாலை.

குடும்பத்தினர்
(சி/4687)

வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்ற மருத்துக் கலவையாளர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மருந்துக் கலவையாளர் சங்கத்தின் தலைவர் திரு. கே. பத்மநாதன் தலைமையில் யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசங்களின் காரியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 22 ஆயுள்வேத வைத்தியசாலைகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளார்கள். (14)

## மீனவர் கைது

இலங்கைக்கு டீசல் கடத்த முயன்றதான குற்றச்சாட்டின் கீழ் மூன்று இந்திய மீனவர்களை இந்தியக் கடற்படை கைதுசெய்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் ஜகதாப் பட்டணத்திற்கு அப்பால் கைதான இம் மீனவர்கள் தமக்கு அனுமதிக்கப்பட்ட அளவைக்காட்டிலும் மிக அதிகமான அளவில் டீசல் வைத்திருந்தமைக்காக கைதுசெய்யப்பட்டதாக கடலோரக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடற்படையினர் கூறியுள்ளனர்.

### தேடாத

வரப்பட்டு அடையாளம் காணப்பட்ட பிறகு உறவினரிடம்கையளிக்கப்பட்டதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

### கோவை

தலைமையுரையினைத் தொடர்ந்து சா. அ. தர்மரட்ணம், ஐயா சச்சிதானந்தம், மாமனிதர் எஸ். ரி. அரசு, க. விஸ்வலிங்கம், பொன். பூலோகசிங்கம், யோகரட்ணம் யோகி ஆகியோர் உரையாற்றினர்.

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இருபாலையை வதிவிடமாகக் கொண்டவருமான தம்பிப்பிள்ளை வீரசிங்கம் 11-07-92 இல் காலமானார். இவர் பவளம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்லாச்சியின் அன்பு மகனும், செல்வநாயகி, பாலசறோசினி, தேவராணி, இந்திராணி பாலசிங்கம், சண்முகராசா [பிரான்ஸ்], விக்னேஸ்வரன் [பிரான்ஸ்], கேதீஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் தந்தையும், (காலஞ் சென்ற அலன்) செல்வராஜா, நாகராசா, சிவலோகநாதன், கமலா, யோகமலர் [பிரான்ஸ்], நவநீதசெல்வி [பிரான்ஸ்], தர்மரஞ்சினி ஆகியோரின் மாமனாரும், திருமதி புக்தகுணசீலன் திருமதி சிவநாதன், ரேணு [பிரான்ஸ்], தேவன் [பிரான்ஸ்], சுகந்தி, தாஸ், சுதா, கிரிஜா, பாலேந்திரன், பிரபா, றீகன், ஜெகன், சுதன், சிவா, றீகா [பிரான்ஸ்], ஜீகா [பிரான்ஸ்], மிராஸ் [பிரான்ஸ்], புவி [பிரான்ஸ்] ஆகியோரின் பேரனும், சுதர்சன், அரும்புயன், நிரோசன், ருத்திலா ஆகியோரின் பீட்டனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 - 07 - 92 (இன்று) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
மனைவி

அரசடி வீதி,
இருபாலை.
[2802]

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

**11. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கங்கள்:- 4840

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:-
26-3652, 28-4672, 26-3321, 41-9663, 27-1292, 26-5563, 26-1194, 26-2135, 27-1542, 41-6177, 26-7039, 26-5143, 28-1020, 25-7001, 36-4808, 36-4265, 27-5206, 27-1836, 41-9759, 22-5622, 26-4429, 26-8223, 26-1321, 27-7653, 26-6398, 27-6563, 36-4721, 25-5741, 25-1972, 25-1800, 71-2659, 70-8005, 70-3728,

வட பகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
28-3029, 41-9652, 24-6639, 26-5857, 27-7711, 26-6197, 26-3518, 28-0940, 41-3603, 27-6439, 24-5418, 26-1343, 28-7261, 28-912, 27-1027, 41-5015, 28-7978, 26-4568, 22-8835, 26-1376, 26-9495, 42-0969, 26-3582, 26-6924, 42-1059, 28-2342, 41-4166, 24-4560